# தமிழ் இலக்கியங்களில் உளவியல் கூறுகள்

68

**சிந்தியா.தி & முனைவர்.இரா.ஜெயஸ்ரீ**
**ஆராய்ச்சி மாணவி (தமிழ் )**
**சாஸ்த்ராநிகர்நிலைப்பல்கலைக் கழகம் தஞ்சாவூர்**

**முன்னுரை :**

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் [1]"

என்றார் திருவள்ளுவர் .

உடலின் தேவைகள் நிறைவதால் மட்டுமே உள்ளம் நிறைவு காண்பதில்லை.உள்ளத்தின் தேவைகள் நிறைவேறினால் மட்டுமே மனிதன் முழு உடல் நலம் பெற்றுள்ளான் என்று கூற இயலும் .நலமான உள்ளம் பெற்றுள்ள ஒருவனால் மட்டுமே ஆக்கப்பூர்வமான கருத்துகளை சமுதாயத்திற்கு வழங்க முடியும்.அவ்வகையில் இக்கட்டுரை உளவியல் நோக்கில் சில சங்கப்பாடல்களை ஆராய முற்படுகிறது.

**சங்க இலக்கியமும் உளவியலும்:**

சங்க இலக்கியமும், உளவியலும் இரு பெரும் அறிவுத்துறைகள் ஒன்றைக்கொண்டு மற்றொன்றை முற்றிலும் அளவிட இயலாது. ஆனால் சங்க இலக்கியத்தைப் பயிலும் காலை அறிவுத்துறைகளில் தலைமைச் சான்று உளவியலின் அகக்கூறுகளைப் பொதிந்து வைத்துள்ள நிலையினை சில பாடங்களில் வழி எடுத்துக்காட்ட ஆய்வாளர்கள் முற்படுகின்றனர்.

**அறிவார்ந்த விளக்கம்:**

மனம் எப்பெரும் இன்பத்தையே விரும்புவது துன்பத்தை வெறுப்பது ஆயினும் எப்போதுமே உலகம் இன்பகரமானதாக இருப்பதில்லை.

தோல்விகளும் துன்பங்களும் வரும்போது அவற்றின் உண்மையான காரணங்களை விட்டுவிட்டு வேறு ஏற்கத் தகுந்த காரணங்களை உருவாக்கிக் கொள்ளுதல் உள்ளத்தின் இயல்பாகும்.

இவ்வுளநலப் பாதுகாப்பு முறையை "அறிவார்ந்த விளக்கம்" என்கிறோம். இதற்கு நடைமுறை வாழ்வில் பல சான்றுகளை காட்டலாம்.

1. தனக்கு எட்டாத திராட்சைகளைப் புளித்த பழங்கள் என்று கூறி ஒதுக்குவதை நாம் அனைவரும் அறிந்த கதையாகும்.
2. பள்ளிக்கு/அலுவலகத்திற்குத் தாமதமாக வருவோர் வேறு பல காரணங்களை கூறி அனுதாபம் தேட முயல்வது.
3. தேர்வில் ,காதலில் தோல்வியை அடைந்த மனம் தற்கொலை வாயிலாக தனது ஆற்றாமையை அமைதிப்படுத்த நினைப்பது.
4. தன்னுடைய தோல்விக்குரிய காரணங்களை பிறர் மீது ஏற்றுவது.
5. அலுவலகத்தில் மேலதிகாரி மீது காட்ட முடியாத சினத்தை வீட்டில் பிள்ளைகள் மீது காட்டுவது போன்றவற்றை கூறலாம்.

"தோல்வியை நியாயப்படுத்தி கொள்வதால் தனக்கொரு போலி நிறைவையும், பிறர் பார்வையில் தன் மதிப்பை காத்துக் கொள்ளவும் இயங்குகிறது. சாக்குப் போக்கு சொல்லுகின்ற எல்லா நடவடிக்கைகளுமே அறிவார்ந்த விளக்கங்களேயாகும்" என்றும் உளவியல் உண்மையை இங்கே கருதத்தக்கதாகும்.

**வேறு காரணம் கூறி ஆற்றுவித்தல்:**

சங்க இலக்கியத்தில் தலைவன் பொருள் முதலான காரணங்களுக்காகத் தலைவியைப் பிரியும் சூழல்கள் சரி செய்தல் செயல்பாடு மிகுதியாக உள்ளது.

தலைவனின் பெருங்கவலை தன்னாலும், தன் தலைவியாலும் இப் பிரிவினைப் பொறுக்க இயலுமா? என்பதேயாகும். எனவே ஏதாவது ஒரு காரணத்தால் பிரிவினை ஏற்றிப்போட நினைக்கிறான்.

குறுந்தொகையில் உகாய்க்குடிக்கிழாரின் பாடல் ஒன்று பாடாண்திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது.

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு
அம் மா அரிவையும் வருமோ
எம்மை உய்த்துமோ உரைத்திசின் நெஞ்சே"

பொருள் தேட வேண்டுமென்று துணிந்த நெஞ்சை நோக்கி, "நெஞ்சே! இரவலர்களுக்குக் கொடுத்தலும், இன்பங்களை அனுபவித்தலும் பொருளில்லாத வறியவர்களுக்கு இல்லை என்று கருதி பொருள் செய்ததற்குரிய செயல்களை மிகவும் எண்ணிச் செய்கிறாய். அச்செயல் செய்வதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும் வருவாளோ? எம்மை மட்டும் செலுத்துகின்றாயே! சொல்லுவாயாக! என்று கூறி தலைவன்
செலவழுங்குகிறான்.

"முந்நீர் வழக்கம்
மகடூ உவோடு இல்லை"

என்ற பிரிவில் தலைவியை உடன் அழைத்துச் செல்லும் தலைமகன் கடல் கடந்து செல்லுதல் இல்லை.

எனவே "தலைவி" முந்நீர் வழக்கம் கடந்து தன்னுடன் வரமாட்டான் என்பதால் பொருள் தேட வேண்டும் என்ற தன் நெஞ்சிடம் தான் இப்பயணத்தைத் தவிர்ப்பதாகத் தலைவன் கூறுகிறான்.

இரவலர்களுக்குக் கொடுத்தல் இனிமைதான் என்னும் அக்கொடையினால் வரும் புகழையும் ,இனிமையையும் விட தலைவியின் பிரிவால் வரும் துன்பத்தைத் தாங்க தலைவன் இயலாது.

பொருளில்லாத வறியவர்களால் இன்பங்களை அனுபவித்தல் இயலாது. ஆனாலும் வறுமைத் துன்பமோ இருவரும் சேர்ந்து கடத்தற்குரியது. பிரிவுத் துன்பமோ தனித்தனியாக கடத்தற்கு இயலாதது. எனவே தலைவியுடன் தான் சேர்ந்து இருந்து வரும் துன்பங்களையோ வறுமையோ எதிர்கொள்ள தலைவன் தயாராக உள்ளான் என்பதை உளவியல் பார்வையில் இப்பாடல் விளக்குகிறது .

**பொதுமையாக்கம்:**

1. தற்புனைவு சிந்தனை
2. சார்பெண்ணச் சிந்தனை

இவ்விரண்டின் அடிப்படையில் பொதுமையாக்கம் (ஜெனரலைசேஷன்) எண்ணம் ஏற்படுதலுண்டு.

சான்றாக,

1. ஓரிரு செயல்பாடுகளாக ஒருவரை நல்லவர் என்றோ தீயவர் என்றோ முடிவு செய்வது.
2. ஒரு குறிப்பிட்ட இன / மத அடையாளங்களின் அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் இப்படித்தான் இருக்கும் என முடிவு செய்வது.
3. சில சூழல்களில் தன்னுடைய கருத்துக்கு வலு சேர்க்க தன் இனக் குழுக்களைப் பயன்படுத்துதல்.

4. திரைப்படம்/ஊடகங்களில் இவற்றில் ஒரு குறிப்பிட்ட இன/ மத அடையாளங்களை உயர்த்திக்காட்டல்/ தாழ்த்திக்காட்டல்.
5. குறிப்பிட்ட மனிதர்/ குழு /இனம் இவற்றைப் பாராட்ட தற்போது புலனங்களில் அடையாளச் சின்னம் (டிபி) வைத்தல், தனது தொடர்பில் உள்ளவர்களுக்கு அதை வெளிச்சம் போட்டுக்காட்டுதல் (ஸ்டேட்டஸ்) போன்றவற்றின் மூலம் விருப்பத்தையோ வெறுப்பையோ மனம் உலகிற்குத் தெரிவித்து விடுகிறது.

நற்றிணையில், தலைவனின் பிரிவைத் தோழி தலைவிக்கு உணர்த்தியபோது தலைவி கூறுகிறாள்:

“நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என் தோள்பிரிவு அறியலரே
தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொழுத்த தீம்தேன் போல
புறைய மன்ற புரையோர் கேண்மை
நீர் இன்று அமையா உலகம் போலத்
தம் இன்று அமையா நம் நயந்தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செப்பு அறியலரே”!

என்று நம் காதலர் நின்று சொல்லையும், நீண்ட நாள் இனிமையும் இருக்கச் செய்பவர்.

என் தோளைப் பிரிய அறியாதவர், தாமரையின் குளிர்ந்த தாதினை வண்டு ஊதி மாலை மேலுள்ள சந்தன மரத்தில் இனிய தேனை சேர்த்து வைக்கும் தேன் போல அவ்வுயர்ந்தோர் நட்பு உறுதி உடையது.

“நீர் இல்லாமல் உலகம் வாழ முடியாது போல அவர் இல்லாமல் நாம் வாழ முடியாது” என்கிறாள்.

“தாமரை ,சந்தன மரம் போன்ற உயர்வான பொருட்களை பொதுமைப்படுத்தித் தன் காதலரும் அதுபோல உயர்வானவரே” என்கிறாள். இவ்வாறு கூறுவதன் மூலம் அவளது உளத்தற்காப்பு “தலைவன் தன்னை பிரிய மாட்டான்” என்று உறுதி செய்து கொள்கிறது.

தன்னை உணர்வது உளவியலின் அடிப்படையாகும். மனித இனப் பண்பின் அடிப்படையான இத்தன்மை உளவியல் ஆய்வில் முதன்மை பெறுகிறது. மனிதர்களின் உள இயல்புகளான
சங்க இலக்கியப் பாடல்களை ஆராய்வதன் மூலம் உளவியல் கூறுகளின் புதிய பரிணாமங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர இயலும்.

**ஆய்வுக்குத் துணை நின்று நூல்கள்:**

1. திருக்குறள் -சிற்றினம் சேராமை, எண்-7
2. தொல்காப்பியம்-சுபாஷ் சந்திர போஷ்- அகத்திணை-37
3. சங்க இலக்கியத்தில் உளவியல்- டாக்டர் து. சிவராஜ்- பக்கம் எண் 117 - சிவம் பதிப்பகம் -வேலூர் - முதற்பதிப்பு டிசம்பர் 1994